# உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம் கும்பகோணம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை:திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

**ந.க.எண்: 1154/2018 குஉ திகு நாள்: 23.10.2018**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017, தஞ்சாவூர் மாவட்டம் - கும்பகோணம் வட்டம் - சுவாமிமலை பேரூராட்சி/கிராமம், புல எண்:81/4-ல் 34,983.00சதுரஅடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற KSN நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் - வழங்கப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2017.
3. அரசாணை (நிலை) எண்: 55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:02.05.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை கடிதம், ந.க.எண்.13193/2017/எல்ஏ2, நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
5. மனுதாரர் V.விக்னேஷ், 13/18, கள்ளர் தெரு, சுவாமிமலை அவர்களின் கடிதம், நாள்:இல்லை.

--------

உத்தரவு:

பார்வை (1), (2) மற்றும் (3)-ல் கண்ட அரசாணைகளின்படியும் பார்வை(4)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி பார்வை (5)-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழுமம் - கும்பகோணம் வட்டம் - சுவாமிமலை பேரூராட்சி/கிராமம், புல எண்:81/4-ல் 34,983.00சதுரஅடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற KSN நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.இ/குஉதிகு எண்:75/2018**-என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 34,983.00சதுரஅடி |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 11 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : 4-14 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 03 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : 1, 2, 3 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : 6,892.50சதுரஅடி |
| பூங்கா | : 710சதுரஅடி – 10.30% |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:

1. பரிசீலனைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/-வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம். மனை எண்: **1, 2, 3** | **DTCP/L/0295480/2017**<br>நாள்:**08.06.2018**<br>**03x500=ரூ.1,500/-** |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2. வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 75ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| உதாரணமாக மனை எண்:**13** | **185.80ச.மீ.** | **185.80ச.மீ.x30=ரூ. 5,574.00/-**<br>**Say**<br>ரூ. **5,600.00/-** | **185.80ச.மீ.x75=ரூ. 13,935.00/-**<br>**Say**<br>ரூ. **14,000.00/-** |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைபடுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **<u>Regularisation charges Head of Account:</u>**<br>**0217 - Urban Development**<br>**60 - Other Urban Development Schemes**<br>**800 - Others Receipts**<br>**AT - Receipts under Regularisation Charges of Unapproved Layouts and plot-DTCP 27 Non Taxation Fees 30 Regularisation (DPC: 0217-60-800-AT-2730).** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை(1) மற்றும் (2)-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) அரசாணை (நிலை) எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு

சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு(OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்(பொறுப்பு),
கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழுமம்,
கும்பகோணம்.

23/10/18

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர்:
செயல் அலுவலர்(கி.ஊ.),
சுவாமிமலை பேரூராட்சி,
சுவாமிமலை.

நகல்:
மனுதாரர்:
V.விக்னேஷ்,
13/18, கள்ளர் தெரு,
சுவாமிமலை.

| | |
|---|---|
| 2)உதவி இயக்குநர்,<br>நிலஅளவை பதிவேடு துறை,<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>தஞ்சாவூர் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3)சார்பதிவாளர்,<br>சார்பதிவாளர் அலுவலகம்,<br>சுவாமிமலை.<br>தஞ்சாவூர் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு |

## சுவாமிமலை முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை திரு.பா.ராஜசேகர்.

ந.க.எண் 128/2019 நாள்: 31.07.2019

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு - தஞ்சாவூர் மாவட்டம் – சுவாமிமலை முதல்நிலை பேரூராட்சி – சுவாமிமலை வருவாய் கிராம எண் 22 அனுமதியற்ற கே.எஸ்.என் நகர் மனைப்பிரிவு சுவாமிமலை புல எண் 81/4 இல் அமைந்துள்ள மனைப்பிரிவின் மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளை வரன்முறைப்படுத்தி உத்திரவு பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை எண் 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017
2) அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 13.10.2017
3) அரசாணை எண் 55 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 02.05.2018
4) மனுதாரர் திரு. வி. விக்னேஷ்,13/18, கள்ளர் தெரு, சுவாமிமலை அவர்களின் விண்ணப்பம் நாள் 09.07.2019
5) உறுப்பினர், செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம் அவர்களின் செயல்முறை கடித எண் 1154 / 2018 கு.உ.தி.கு நாள் 23.10.2018
6) சுவாமிமலை பேரூராட்சி மன்ற தீர்மான எண் 240 நாள் 23.11.2018
7) தானப்பத்திர ஆவண எண் 2047/2019 நாள் 17.07.2019

**உத்திரவு:–**

தஞ்சாவூர் மாவட்டம் சுவாமிமலை முதல்நிலை பேரூராட்சி, சுவாமிமலை வருவாய் கிராம எண் 22 அனுமதியற்ற கே. எஸ். என். நகர் மனைப்பிரிவு சுவாமிமலை புல எண் 81/4 இல் அமைந்துள்ள மனைப்பிரிவின் மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளை பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணை வழிகாட்டுதலின்படி மனைப்பிரிவை வரன்முறைப்படுத்த கட்டணங்கள் குறித்த மதிப்பீட்டு விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. கூராய்வு கட்டணம் – அரசாணை விதி எண் 12ன்படி மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணமாக ரூ 500/–
2. வரன்முறை கட்டணமாக ச.மீ ஒன்றுக்கு ரூ 37.50/–.
3. வளர்ச்சி கட்டணமாக ச.மீ ஒன்றுக்கு ரூ 75/–.

பார்வை 5–ல் காணும் உறுப்பினர்/ செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம் செயலாணையில் மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகளை வரன்முறைப்படுத்த ஏதுவாக பிரஸ்தாப மனை /மனைப்பிரிவிற்கு Sold out Frame work உத்தரவு மற்றும் வரைபடம் முதலியன வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 6–ல் காணும் சுவாமிமலை பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைபிரிவில் உள்ள மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளை **மட்டும்** வரன் முறைப்படுத்த உரிய கட்டணங்கள் செலுத்த பார்வை –6ல் காணும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி, உள்ள தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டது.

1) பார்வை 2–ல்காணும் அரசாணை விதி 12ல் தெரிவித்துள்ளவாறு கூராய்வு கட்டணம் மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளுக்கும் 06.06.2018 தேதியில் DTCP /

**L/ 00295480/ 2017 இன்படி, ரூ. 3X 500 = 1500/–** செலுத்தப்பட்டுள்ள விவரம் உள்ளூர் திட்டக்குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) அரசாணை விதி 9–ன்படி முறைப்படுத்துதல் கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ 37.50/– வீதம் மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளுக்கும் பரப்பு **566 சதுர மீட்டருக்கு ரூ 21225/– உரிய அரசு கணக்கில் 24.07.2019** ல் மனுதாரரால் செலுத்தப்பட்டு உரிய செலுத்து சீட்டு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

3) மேலும் அரசாணை விதி 10ல் தெரிவிக்கப்பட வளர்ச்சிக் கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ 75/–வீதம் மனை எண் மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளுக்கு பரப்பு **566** சதுர மீட்டருக்கு **(6090.16 ச. அ) ரூ 42450/–(** இந்தியன் வங்கி வரைவோலை எண் 908027321 நாள் 24.07.2019) **பல்வகை ரசீது எண் 17/2019–20 நாள் 31.07.2019–ன்**படி செலுத்தப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட அனைத்து கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து அரசாணை மற்றும் செயலாணை நிபந்தனைகளுக்குட்பட்டு சுவாமிமலை வருவாய் கிராம எண் 22 இல் அனுமதியற்ற **கே. எஸ். என்** நகர் மனைப்பிரிவு சுவாமிமலை **புல எண் 81/4** ல் **அமைந்துள்ள மனைப்பிரிவின் மனை எண் 1 முதல் 3 வரையுள்ள 3 மனைகளை மட்டும்** வரைமுறைப்படுத்தி உத்திரவிடப்படுகிறது.

செயல் அலுவலர்,
சுவாமிமலை பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்.

பேரூராட்சி அலுவலகம் சுவாமிமலை தஞ்சாவூர் மாவட்டம்

**பெறுதல் –**
திரு. வி. விக்னேஷ்,1
3/18, கள்ளர் தெரு,
சுவாமிமலை.

**நகல்** – 1. உறுப்பினர்,செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம்
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், சுவாமிமலை.